பக்கங்கள் 15+2

மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 25 வியாழக்கிழமை 08.05.2025 | அதிர்வு 278

யாழில் மின்னல் தாக்கி ஆண் ஒருவர் மரணம்!



யாழ்ப்பாணத்தில் இன்று மின்னல் தாக்கி ஆண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஏழாலை பகுதியைச் சேர்ந்த குணரட்னம் ▶04

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

காணிகளை அபகரிக்கும் வர்த்தமானியின் உள்நோக்கம் என்ன?

நாடாளுமன்றில் சிறீதரன் எம்.பி. கேள்வி

(ந.லோகதயாளன்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள 5 ஆயிரத்து 700 ஏக்கருக்கும் அதிகமான தமிழர்களின் பூர்வீக நிலங்களைச் சுவீகரிப்பதற்காக 2025.03.28 ஆம் திகதி வெளியிடப்பட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலின் உள்நோக்கம் என்ன என்பதை, கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சர் கே.டி. லால்காந்த சபைக்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்றக் குழுத் தலைவருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். ▶04

யாழ். மாநகரத்துக்கு விலை போகாதவரே மேயராக வரவேண்டும்

தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் மணி அணியினர் வலியுறுத்து

(எஸ். நிதர்ஷன்)

"யாழ்ப்பாணம் மாநகர சபை மேயராக வரக் கூடியவர் விலை போகாதவராகத் தமிழ்த் தேசியப் பற்றுடன் செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும்." ▶04

தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து

நல்லூர், காரைநகர் சபைகளில் ஆட்சி அமைக்க 'மான்' முயற்சி



(எஸ்.நிதர்ஷன்)

"நல்லூர் பிரதேச சபையிலும், காரைநகர் பிரதேச சபையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து தமிழ் மக்கள் கூட்டணி ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது. அவ்வாறு ஆட்சி அமைத்தால் அந்தப் பிரதேச சபைகளைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வோம்."

– இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். ▶04

அம்ஷிகாவுக்கு நீதி கோரி கொழும்பில் போராட்டம்!

(எஸ்.ஜினோதன்)

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் டில்ஷி அம்ஷிகா என்ற பாடசாலை மாணவி உயிரை மாய்த்துக்கொள்வ தற்குக் காரணமாக இருந்த அனைவ ருக்கும் தண்டனை வழங்கப்பட வேண் டும், மாணவின் குடும்பத்துக்கு நீதி வழங் கப்பட வேண்டும் என வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் பொதுமக்கள், மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

அவர்கள் கொட்டாஞ்சேனை விவேகா னந்தர் சந்தியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதையடுத்து, ஹின்னி அப்புஹாமி மாவத்தையில் அமைந்துள்ள தனி யார் கல்வி நிலையத்துக்கு முன்னாலும் எதிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத் தனர்.

அத்துடன், கொட்டாஞ்சேனை கல் பொத்த வீதியில் அமைந்துள்ள மாணவி யின் வீட்டுக்கு முன்னால் சென்ற ஆர்ப்பாட்டக்காரர்கள் அங்கு மாணவி யின் பெற்றோருக்கு ஆறுதலைத் தெரி வித்ததுடன், மாணவியின் மரணத் துக்குக் காரணமானவர்கள் தண்டனை யின் முன்நிறுத்தப்படுவார்கள் என்று தெரிவித்து தங்களது ஆதரவு ஆர்ப்பாட் டத்தை முன்னெடுத்ததுடன் உயிரிழந்த மாணவிக்காக ஆத்ம சாந்திப் பிரார்த் தனையிலும் ஈடுபட்டனர்.

இதேவேளை, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள மாணவி ஆரம்பத்தில் கல்வி பயின்ற பாடசாலைக்கு முன்னா லும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட் டமை குறிப்பிடத்தக்கது.

சைக்கிளை மிஞ்சிய சங்கு!

(ந.லோகதயாளன்)

சைக்கிள் சின்னத்தை விடவும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் சங்கு சின்னம் அதிக ஆனங்களைக் கைப் பற்றியுள்ளது.

2025 ஆம் ஆண்டிற்கான உள்ளூ ராட்சி சபைத் தேர்தலில் வடக்கு, கிழக் கில் தமிழ் கட்சிகளில் அதிக ஆச னங்களை தமிழ் அரசுக் கட்சி கைப் பற்றியுள்ளது. இரண்டாவது அதிகப் படியான ஆசன்ங்களை சங்குச் சின் னத்தில் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியே கைப்பற்றியுள்ளது. அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியானது 3 ஆவது இடத்திற்குப் பின் தள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய தமிழ் அரசுக் கட்சி 307,657 வாக்குகளைப் பெற்று வடக்கு கிழக்கில் 37 சபைகளில் அதிக ஆச னங்களுடன் 377 உறுப்பினர்களைப் பெற்றுள்ளது. தேசிய ரீதியில் ஆசன எண்ணிக்கையில் 5 ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. இரண்டாம் இடத்தில் உள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 89,177 வாக்குகளுடன் 106 ஆசனங்களைக் கைப்பற்றி தேசிய ரீதியில் 9 ஆவது இடத்தைப் பெற் றுள்ளது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் வடக்கு, கிழக்கில் முழுமையாகப் போட் டியிட் டபோதும் யாழ் ப் பாணம் மாவட்டத்தில் மட்டுமே 79 ஆசனங்களை பெறமுடிந்துள்ளது ஏனைய எந்த மாவட்டத்திலும் இரட்டை இலக்க ஆசனங்களைக் கூட பெற முடியாத – மொத்தமாக 100 ஆசனங்களை யேனும் பெற முடியாத – நிலைமையே நேர்ந்துள்ளது. மட்டக்களப்பு மற்றும் மன்னார் மாவட்டங்களில் தலா இரண்டு ஆசனங்களும், முல்லைத்தீவில் 06 ஆசனங்கள் உள்பட மொத்தம் நூ ற்றிற்கும் உட்பட்ட ஆசனங்களையே பெற்றுள்ளது.

இதேநேரம் ஈ.பி.டி.பி. யாழ்ப்பா ணத்தில் 32 ஆசனங்களகயும், கிளி நொச்சியில் 02,

வவுனியாவில் ஒரு ஆசனம் என 39 இடங்களைப் பெற்றுள்ளது.

தமிழ் மக்கள் கூட்டணி 9 சபைகளில் போட்டியிட்டு 18 ஆசனங்களைக் கைப் பற்றியுள்ளது.

மோட்டார் சைக்கிளுடன் லொறி மோதி 2 பேர் பலி!

வாகன விபத்தில் இருவர் பரிதா பகரமாக உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்து நேற்று புதன்கிழமை மாலை அம்பாந்தோட்டை மாவட்டம், வீரகெட்டிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட குருகொடெல்ல சந்திக்கு அருகில் இடம்பெற்றுள்ளது. லொறி ஒன்று மோட்டார் சைக்கிளு டன் மோதியதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளது.

விபத்தின்போது மோட்டார் சைக் கிளில் பயணித்த இருவரும் படுகாய மடைந்த நிலையில் வீரகெட்டிய வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசார ணைகளை வீரகெட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் நியமனம்

(எஸ்.ஜினோதன்)

பரீட்சை திணைக்களத்தின் புதிய பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாக சுபாஷினி இந்திகா குமாரி லியனகே இன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுவரை பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாகக் கடமையாற்றி வந்த எச்.ஜே. எம்.சி.ஏ. ஜயசுந்தரவின் பதவிக் காலம் கடந்த 6ஆம் திகதி செவ்வாய்க் கிழமையுடன் நிறைவு பெற்றது.

இந்நிலையிலேயே, பரீட்சை திணைக்களத்தில் சேவையாற்றி வந்த சுபாஷினி இந்திகா குமாரி லியனகே பரீட்சைகள் ஆணையாளர் நாயகமாகப் பதவி உயர்வு பெற்றுள்ளார்.

அத்துடன், புதிய அளவையாளர் நாயகமும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தவகையில், வை.ஜீ.ஞானதிலக்க புதிய அளவையாளர் நாயகமாக நிய மனம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இளம் குடும்பஸ்தர் பரிதாப உயிரிழப்பு

யாழ்ப்பாணம் – அராலி பகுதியில் உழவு இயந்திரத்தின் சக்கரத்தினுள் சிக்குண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்தார்.

அராலி மேற்கு, வட்டுக்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய பத்மநாதன் தனீஸ்வரன் என்ற நபரே உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மேற்படி நபர் நேற்று புதன்கிழமை இரவு தனது உழவு இயந்திரத்தின் கீழே இறங்கி நின்றவாறு திறப்பை இயங்கச் செய்துள்ளார்.

இதன்போது கியர் இயக்கத்தில் இருந்த உழவு இயந்திரம் திடீரென இயங்க ஆரம்பித்த நிலையில் குடும் பஸ்தர் கீழே வீழ்ந்ததால் அவர் மீது உழவு இயந்திரத்தின் சக்கரம் ஏறியது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த குடும்பஸ்தர் சிகிச்சைக்காக யாழ்ப்பா ணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

இருப்பினும் அவர் ஏற்கனவே உயி ரிழந்து விட்டார் என்று வைத்தியர்கள் தெரிவித்தனர்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளைத் திடீர் மரண விசார ணையை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

உடற்கூற்றுப் பரிசோதனைகளுக் காகச் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள் ளது.

பருத்தித்துறையில் காய்ச்சலால் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு

யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த இளைஞர் உயிரிழந்த நிலையில் , உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பகுதியைச் சேர்ந்த பரந்தாமன் லக்சன் (வயது 21) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி இளைஞர் கொழும்பில் உயர் படிப்பை கற்றுவரும் நிலையில், யாழ்ப்பாணத்தில் உள்ள தனது வீட்டுக்கு திரும்பிய நிலையில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

நான்கு நாட்களாகக் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிந்த நிலையில் நேற்று புதன் கிழமை உடல்நிலை மிக மோசமான நிலையில் குடும்பத்தினர் அவரை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

அவரின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக பரிசோதனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

காணிகளை...

இன்றைய சபை அமர்வில், நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 27.2இன் கீழ், நாடாளுமன்றக் குழுத் தலைவராக, துறைசார் அமைச்சரிடம் வாய்மொழி மூல விடைக்கான வினாக்களை முன்வைக்கும்போதே அவர் இந்த விடயம் குறித்து சிறீதரன் எம்.பி. கேள்வி எழுப்பினார்.

இதன்போது அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

“குறித்த வர்த்தமானி அறிவித்தல் மூலம் கோரப்பட்டுள்ள காணிகள் என்ன தேவைக்காகக் கோரப்பட்டுள்ளன என்பதையும், 5700 ஏக்கர் வரையான காணிகளை அவசரமாகச் சுவீகரிப்பதற்கான காரணம் என்ன என்பதையும் அமைச்சர் இந்தச் சபைக்கு அறிவிக்க வேண்டும்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் நீண்டகாலம் நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து, உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும், உறவினர் – நண்பர்களின் வீடுகளிலும் வாழும் போது அவர்களது காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்காமல், மக்களின் காணிகளை சுவீகரிக்கும் இந்த வர்த்தமானி அறிவித்தலின் உள் நோக்கம் என்ன என்பதையும், தமிழ் மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நீண்ட கால யுத்தம் காரணமாக அவர்களது காணி ஆவணங்கள் தவறவிடப்பட்டுள்ளதாக மாவட்டச் செயலகங்கள் தெரிவிக்கும் நிலையில், இந்தப் புதிய வர்த்தமானி அறிவித்தல் மூலம் காணி உரிமையை உறுதிப்படுத்துமாறு எவ்வாறு கோர முடியும் என்பதையும் அமைச்சர் இந்த உயரிய சபைக்கு அறிவிக்க வேண்டும்.” – என்று வலியுறுத்தினார்.

நாடாளுமன்ற நிலையியற் கட்டளை 27.2 இன் கீழ், நாடாளுமன்றக் குழுத் தலைவர்களால் கேட்கப்படும் வாய்மொழி மூல வினாக்களுக்கு, துறைசார் அமைச்சர் உரிய காலத்திற்குள் பதிலளிக்க வேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழில் மின்னல்...

குமரன் (வயது 39) என்பவரே உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் ஏழாலை பகுதியில் உள்ள தோட்டமொன்றில் மிளகாய் பறித்துக் கொண்டிருந்த வேளை திடீரென மழை பெய்தமையால், மழைக்கு ஒதுங்கி நின்றபோதே மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

நல்லூர்...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நடைபெற்று முடிந்து உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் மான் சின்னத்தில் போட்டியிட்ட நமக்கு மக்கள் பெரும் ஆதரவைத் தந்துள்ளார்கள். இனிவரும் தேர்தல்களில் நாம் புத்தெழுச்சியுடன் போட்டியிடுவோம்.

இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தோம். அவற்றில் சில நிராகரிக்கப்பட்ட நிலையில் 7 சபைகளில் போட்டியிட்டோம்.

விதியோ சதியோ தெரியவில்லை எமது வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டமையால், நாம் சட்டப் போராட்டத்தில்ஈடுபட்டோம். அந்தமுயற்சியும்தோல்வியடைந்தமையால் நாம் தேர்தல் பிரச்சாரப் பணிகளுக்காக வெறும் 11 நாட்களே செலவு செய்தோம்.

குறுகிய கால பிரச்சாரங்களை மேற்கொண்ட போதிலும் சிறப்பான அடைவுகளைப் பெற்றுள்ளோம்.

நல்லூர் பிரதேச சபையில் 6 ஆசனங்களையும், காரைநகர் பிரதேச சபையில் 2 ஆசனங்களையும் பெற்றுள்ளோம். அங்கு தமிழ்த் தேசியக் கட்சிகளுடன் இணைந்து ஆட்சி அமைக்கக் கூடிய நிலைமை காணப்படுகின்றது.

அவ்வாறு ஆட்சி அமைத்தால் அந்தப் பிரதேச சபைகளைச் சிறப்பான முறையில் முன்னெடுத்துச் செல்வோம்.” – என்றார்.

யாழ். மாநகரத்துக்கு...

– இவ்வாறு தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் வலியுறுத்தினார் தமிழ் மக்கள் கூட்டணியின் முக்கியஸ்தரும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் முன்னாள் மேயருமான சட்டத்தரணி வி.மணிவண்ணன்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“யாழ். மாநகர சபை மேயர் பதவி என்பது மிக முக்கியமானது. ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை விட முக்கியமானது. நாடாளுமன்ற உறுப்பினரை விட சிறப்பாகச் செயற்படக் கூடியவராக இருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும் இராஜதந்திரிகள் யாழ். மேயரை நிச்சயம் சந்திப்பார்கள். அவ்வாறானவர்களுடன் இராஜதந்திர ரீதியாக உரையாட வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் முன்னெடுக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்கள், தமிழ் மக்களின் அபிலாஷைகள், அவர்களின் பிரச்சினைகள் என்பவற்றை எடுத்துக் கூற வேண்டும்.

எனவே, மேயராக தமது கட்சி சார்பாக முன்னிலைப்படுத்தப்படுவர் சிறப்பானவராக இருக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கட்சிகள் பொறுப்புடன் உணர்ந்து கொண்டு அதற்கு ஏற்றது போல் மேயரைத் தெரிவு செய்ய வேண்டும்.” – என்றார்.

நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

தமிழ் மக்களின் ஆணை!

"நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டுமென்ற எங்களுடைய இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணை தந்திருக்கின்றார்கள்."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்திருக்கின்றார்.

2025ஆம் ஆண்டுக்கான உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கிலே அமோகமான வெற்றியைப் பெற்றிருக்கின்ற பின்புலத்தில் இந்தக் கருத்தை அவர் முன்வைத்திருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

"வடக்கு, கிழக்கிலே இருக்கின்ற தமிழ் மக்கள் எங்களுக்கு அமோகமான வெற்றியைத் தந்திருக்கின்றார்கள். இது உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வெற்றி என்பதைத் தாண்டி, இது தமிழர்களுடைய எதிர்காலத்துக்கான ஆணையொன்றை தமிழ் மக்கள் தமிழரசுக் கட்சியிடம் ஒப்படைத்திருக்கின்றார்கள். நிரந்தரமான ஓர் அரசியல் தீர்வை அடைய வேண்டும் என்ற எங்களுடைய இலக்குக்கு வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் மீண்டும் ஆணைதந்திருக்கின்றார்கள்."- என்று சாணக்கியன் வெளிப்படுத்துகின்றார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத விதத்தில் தேசிய மக்கள் சக்தி என்ற சிங்களக் கட்சிக்கு தென்னிலங்கை மக்கள் பெருவெற்றியைத் தேடிக் கொடுத்தார்கள்.

ஏற்கனவே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியை அக்கட்சியின் தலைவர் வைத்திருக்கின்ற சூழலில், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மைப் பலத்துடன் கூடிய நாடாளுமன்ற வலிமையையும் அதே கட்சிக்கு இலங்கை நாடு கொடுத்தது.

இந்த அதிகாரங்களை வைத்துக் கொண்டு நாட்டுக்கு புதிய அரசமைப்பு ஒன்றைக் கொண்டு வரப் போவதாக ஆளும் தரப்பு அறிவித்துச் செயற்பட்டு வருகின்றது.

இந்தச் சூழலில் வடக்கு, கிழக்கில் - தமிழர் தாயகத்தில் - அதே சிங்களக் கட்சிக்கு கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்கள் கடந்த பொதுத் தேர்தலில் கிட்டி இருக்கிறார்கள்.

இந்த அதிகாரத்தை வைத்துக் கொண்டு வடக்கு, கிழக்கு மக்களின் தலையெழுத்தை தீர்மானிக்கும் அரசமைப்பின் பங்களிப்பையும் தாங்களே முடிவு எடுக்கும் நியாயாதிக்கம் தங்களுக்கு இருப்பதாக தேசிய மக்கள் சக்தி கோடி காட்டி வந்தது.

அந்த நிலையில்தான் இந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்கள் தங்களுடைய நிலைப்பாடு யாது, தங்களை இவ்விடயங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பு எது, தீர்வுக்கான ஆணையை யார் மூலம் தமிழர்கள் பிரயோகிக்கின்றார்கள் என்பவற்றை இந்த உள்ளூராட்சி தேர்தல் முடிவுகள் மூலம் வெளிப்படுத்தி உலகுக்கு உணர்த்தி இருக்கிறார்கள்.

அதையேசாணக்கியன் இப்போது வெளிப்படையாகச் சுட்டி இருக்கிறார்.

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சி வரும்போது இந்த உண்மை நிலையை - இந்த யதார்த்தத்தை - புரிந்து கொண்டு அதற்கேற்ப அரசுத் தரப்பு செயல்பட வேண்டும்.

வாரத்தின் வேலை நாளில் தேர்தல்; வாக்குக் குறைய இதுவே காரணம்!

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாரத்தின் வேலை நாளில் நடைபெற்ற காரணத்தினால் வாக்களிப்பு வீதம் குறைந்துள்ளது என்று தேசிய மக்கள் சக்தி பிரதி அமைச்சர் மஹிந்த சமர சிங்க தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்குக் கிடைக்கப்பெற்ற வாக்குகள் தொடர்பில் பிரதி அமைச்சர் மஹிந்த சமரசிங்க கருத்து வெளியிட்டுள்ளார். இதன்போதே இவ்வாறு

தெரிவித்துள்ளார்.

மேலும், சிங்கள தமிழ் புத்தாண்டு காலம் மற்றும் வெசாக் பண்டிகை காலம் போன்ற காரணிகளும் அரசுக்கு வாக்களித்தவர்கள் எண்ணிக்கை வீழ்ச்சியில் தாக்கம் செலுத்தின என்றும் தெரிவித்துள்ளார்.

மக்கள் அரசு மீது அதிருப்தி கொண்டுள்ளனர் என்று கூறப்படும் கருத்துக்களில் உண்மையில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசு மீது மக்கள் அதிருப்தி கொண்டுள்ளனர் என்று எதிர்க்கட்சிகள் சுமத்தும் குற்றச்சாட்டுக்களுக்கு பதிலளிக்கும் வகையில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை எந்தக் கட்சிக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்

பிரதியமைச்சர் சுனில் வட்டகல வலியுறுத்து

கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை எந்தவொரு கட்சிக்கும் விட்டுக் கொடுக்கப் போவதில்லை என்று பிரதியமைச்சர் சுனில் வட்டகல வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை மேயர் தெரிவு குறித்து ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர்,

கொழும்பு மாநகர சபைக்கான தேர்தலில் எங்களது கட்சியே கூடுதல்

ஆசனங்களை வென்றுள்ளது. எந்தக் கட்சியும் அதற்குப் பக்கத்தில் கூட வர முடியாது.

கொழும்பு மாநகர சபையின் மேயர் பதவி மற்றும் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்காக ஏனைய தரப்புகளில் தெரிவாகியுள்ள ஒருசில உறுப்பினர்களுடன் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்றோம்.

ஆனால், எந்தவொரு கட்சியையும் சேர்த்துக் கொண்டு மாநகர சபை நிர்வாகத்தைக் கைப்பற்ற நாங்கள் தயாரில்லை.

அதேநேரம், எந்தவொரு கட்டத்திலும் கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்தை வேறு எந்தவொரு தரப்புக்கும் விட்டுக் கொடுக்க மாட்டோம்.– என்றார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் நடந்த விபத்தில் 12 பேர் படுகாயம்!

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் பலட்டுவ நுழைவாயிலுக்கு அருகில் இன்று காலை இடம்பெற்ற விபத்தில் 12 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

மாத்தறை – அக்குரஸ்ஸ பிரதான சாலையில் இன்று காலை பயணித்த வான், தெற்கு அதிவேக நெடுஞ்சாலையின் நுழைவாயிலுக்கு அருகில் வீதியின் ஓரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கொள்கலன், லொறியின் பின்புறத்தில் மோதியதில் விபத்து ஏற்பட்டது.

விபத்தில் வானில் பயணித்த 12 பேர் காயமடைந்த நிலையில் மாத்தறை பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த வானில் பயணித்தவர்கள், கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து திரும்பிக் கொண்டிருந்தனர் என்றும் அவர்கள் மாத்தறை முலட்டியான பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

அம்புலன்ஸ்கள் மூலம் விபத்தில் காயமடைந்தவர்களை விரைவாக மருத்துவமனைக்கு கொண்டு செல்ல உள்ளூர் வாசிகளும் பொலிஸாரும் இணைந்து நடவடிக்கை எடுத்தனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இந்தியாவுக்கு அடிக்கடி பயணமாகிறார் ரணில்!

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இந்தியாவுக்கான மூன்று நாள் விஜயமொன்றை மேற்கொண்டு புறப்பட்டுச் சென்றுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் தோல்வியைத் தழுவிய பின்னர் ரணில் விக்ரமசிங்க இதுவரை மூன்று தடவைகள் இந்தியாவுக்கான பயணங்களை மேற்கொண்டுள்ளார்.

இந்த விஜயம் இந்தியாவுக்கான நான்காவது விஜயமாகும்.

இந்தியாவின் முக்கிய பத்திரிகையின் ஏற்பாட்டில், கர்நாடக மாநிலத்தில் நடைபெறும் நிகழ்வொன்றில் பிரதான சொற்பொழிவை ஆற்றுவதற்கான அழைப்பின் பேரிலேயே அவர் இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிகழ்வின் பிரதான அதிதியாக கர்நாடக மாநில முதலமைச்சர் சித்தாராமையா கலந்து கொள்ளவுள்ளார்.

இரண்டு நாள்கள் தொடர்ச்சியாக நடைபெறும் இந்த நிகழ்வில் அரசியல், வர்த்தகம், கலைகள் மற்றும், விளையாட்டு போன்ற பல்வேறு துறைகளின் விற்பன்னர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

எதிர்க்கட்சிகளுடன் பணியாற்ற நாங்கள் தயாராக உள்ளோம்!

ஐ.தே.க. பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியால் தனது வாக்குத் தளத்தை அதிகரிக்க முடிந்துள்ளது என்று கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்துள்ளார்.

தேர்தல் முடிவுகள் வெளியாகிய பின்னர் அவர் நேற்று ஊடகவியலாளர்களிடம் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் கூறுகையில், சில உள்ளூராட்சி மன்றங்களில் ஒரு தீர்க்கமான சக்தியாகவும் ஐக்கிய தேசியக் கட்சி மாறியுள்ளது என்று

அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை எங்களால் ஒரு வாக்குத் தளத்தை அடைய முடிந்துள்ளதுடன், மேலும் பிற எதிர்க்கட்சிகளுடன் இணைந்து பணியாற்றவும் நாங்கள் தயாராக உள்ளோம்.

ஐக்கிய தேசியக் கட்சியால் தனது வாக்குத் தளத்தை அதிகரிக்க முடிந்துள்ளதுடன் சில உள்ளாட்சி அமைப்புகளிலும் நாங்கள் ஒரு தீர்க்கமான சக்தியாக மாறிவிட்டோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

அச்சுவேலி நகரப் பகுதியில் மின் ஒழுக்கால் எரிந்த கடை!

யாழ்ப்பாணம், அச்சுவேலி நகரப் பகுதியில் உள்ள அழகு சாதன விற்பனை நிலையம் பகுதியளவில் எரிந்து சேதமாகியுள்ளது.

மின் ஒழுக்கு காரணமாக இந்த அசம்பாவிதம் இடம் பெற்றுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விற்பனை நிலையத்தைப் பூட்டுவதற்கு உரிமையாளர் முயற்சி செய்த போது, திடீரென விற்பனை நிலையத்தின் பின்பகுதியில் ஏற்பட்ட மின்னொழுக்கு வேகமாக பரவியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புகை வருவதை கண்ணுற்ற அயல் கடை உரிமையாளர்கள் மற்றும் பொது மக்கள் இணைந்து தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மாநகர சபையின் தீயணைப்பு வாகனமும் விரைந்து வந்து நடவடிக்கைகளை மேற்கொண்டது.

சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

முகத்தை மறைக்கும் தலைக்கவசம் அணிந்து பயணித்தால் இனிக் கைது!

மோட்டார் சைக்கிள்களில் பயணிக்கும் போது, முகத்தை மறைக்கும் தலைக் கவசம் அணிந்திருப்பவர்கள் கைது செய்யப்படவுள்ளனர் என்று இலங்கை பொலிஸ் திணைக்களம் விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, குறித்த நபர்கள் தங்கள் அடையாளத்தை, உறுதிப்படுத்தாவிட்டால், அவர்களைக் கைது செய்யும் அதிகாரம் பொலிஸாருக்கு உள்ளது என்றும் அறிவிக்கப் பட்டுள்ளது.

அத்துடன், தலைக்கவசம் அணிந்திருக்கும் போது சந்தேகத்துக்கு இடமான முறையில் நடந்து கொள்வோரைக் கைது செய்ய அதிகாரிகளுக்கு அனுமதி உண்டு என்றும் பொலிஸ் தரப்பு தெரிவித்துள்ளது.

எனவே சோதனைகளின் போது ஒத்துழைக்குமாறு தனிநபர்களைக் கேட்டுக்கொண்டுள்ள, பொலிஸ் தரப்பு, அவ்வாறு செய்யத் தவறுபவர்களைக் கைது செய்யும் அதிகாரம் உள்ளது என்றும் தெரிவித்துள்ளது.

EVEREST
FURNITURE

HIGH QUALITY PRODUCTS

(416) 332-0721

everestfurniture.ca

EverestFurnitureInc

80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

காஷ்மீர் விவகாரம்:

இந்திய - பாகிஸ்தான் இடையே அணு ஆயுத போர் மூளுமா?

● **ஜங்கரன் விக்கினேஸ்வரா.**

பாகிஸ்தானில் உள்ள பஹவல்பூர், கோட்லி மற்றும் முசாபராபாத் இடங்களில் இந்தியா ஏவுகணை தாக்குதல்களை நடத்தியதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாகாணங்களில் உள்ள பகுதிகளை குறிவைத்து இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என்றும் ஒரு ஏவுகணை பாகிஸ்தான் நிர்வாகத்தில் உள்ள காஷ்மீரில் உள்ள முசாபராபாத்தில் உள்ள பழைய விமான நிலையத்தை தாக்கியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் எல்லைக்குள் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது துல்லியமான தாக்குதல் நடத்தியது என்று இந்திய பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது. பாகிஸ்தான் எல்லைக்குள் இந்தியா இராணுவத் தாக்குதல்களைத் திட்டமிடுவதாக உளவுத்துறைத் தகவல்கள் கிடைத்துள்ளன என்று பாகிஸ்தானின் உயர்மட்ட அதிகாரி அண்மையில் தெரிவித்திருந்தார்.

இந்தியாவால் அவ்வாறானதொரு தாக்குதல் நடத்தப்பட்டால் அணு ஆயுதங்கள் உட்பட முழு இராணுவ ஆயுதங்களையும் பாகிஸ்தான் பயன்படுத்த நேரிடும் என்று அவர் இந்தியாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். இந்த நிலையில் பாகிஸ்தான் எல்லைக்குள் உள்ள பயங்கரவாத முகாம்கள் மீது இந்தியா தாக்குதல் நடத்தி உள்ளமையானது பிராந்தியத்தில் பதற்றமான சூழ் நிலையை உருவாக்கியுள்ளது.

பிரிக்கப்பட்ட காஷ்மீர்

இந்தியாவும், பாகிஸ்தானும் சுதந்திரம் பெற்றது முதல் தீர்க்கப்படாத பிரச்சினையாக காஷ்மீர் விவகாரம் இருந்து வருகிறது. நிலப்பகுதிகள் ஆக்கிரமிப்பு, அதனைத் தொடர்ந்து போர் அல்லது ராணுவ நடவடிக்கை நடைபெறுவதும் காஷ்மீரில் தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த விவகாரத்துக்காக இந்தியாவும், பாகிஸ்தானும் ஐ.நா.வரை சென்று குரல் எழுப்பிய வரலாறும் தொடர்ந்து நடந்து வந்துள்ளது.

15 மில்லியன் மக்கள் வசிக்கும் முஸ்லிம் பெரும் பான்மை காஷ்மீர் பிராந்தியம் பாகிஸ்தான் மற்றும் இந்தியா இடையே பிரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இரு நாடுகளும் முழுமையாக உரிமை கோருகின்றன.

காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே அங்கு வாழும் மக்களின் அடிப்படை உரிமைக் குரலாகவும் இருக்கிறது. காலங் கடந்தும் தீராத பதில் ஒன்றுதான். அதுவே காஷ்மீர் இந்தியாவுக்கும் இல்லை, பாகிஸ்தானுக்கும் இல்லை. வரலாற்று உண்மையாக இருவருக்கும் சொந்தமில்லை, காஷ்மீர் காஷ்மீரிகளுக்கு மட்டுமே சொந்தம் என்பதே யதார்த்தமாகிறது.

பஹல்காமில் கொடூர தாக்குதல்

தெற்கு காஷ்மீரில் உள்ள பஹல்காமில் கடந்த 22.04.25 அன்று நடந்த கொடூர தாக்குதலில் சுமார் 26 சுற்றுலாப் பயணிகள் உயிரிழந்தனர். சுற்றுலாப் பயணிகள் மீது நடத்தப்பட்ட இந்தக் கொடிய தாக்குதலுக்கு பாகிஸ்தானைத்த தளமாகக் கொண்ட அமைப்பான லஷ்கர்-இ-தொய்பாவின் நிழல் அமைப்பான ரெசிஸ்டன்ஸ் ஃப்ரண்ட் பொறுப்பேற்றது.

இந்த தாக்குதலை யார் செய்தார்கள் என்பதை இந்தியா தீர்மானித்த பிறகு, பதிலடி நடவடிக்கை எடுக்கப்படும் என்று மத்திய அரசு தெரிவித்தது. இதையடுத்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா ராணுவ நடவடிக்கை எடுக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

இந்த நிலையில் இந்தியா ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தும் என்று பாகிஸ்தான் காஷ்மீரில், விளையாட்டு மைதானங்களில் அவசர பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளன. குடியிருப்பாளர்கள் உணவு மற்றும் மருந்துகளை சேமித்து வைக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். மேலும் மத பள்ளிகள் மூடப்பட்டுள்ளன.

அதே நேரத்தில், எல்லையில் வசிப்பவர்கள் மோதலுக்கு பயந்து தொலைதூர பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து வருகின்றனர். பதுங்குகுழிகளை சுத்தம் செய்து வருகின்றனர்.

பாகிஸ்தான் நீண்ட தூர ஏவுகணை சோதனை!

சர்ச்சைக்குரிய காஷ்மீர் பிராந்தியத்தில் இந்தியா வுடனான பதற்றம் அதிகரித்துள்ள நிலையில், பாகிஸ் தான் இராணுவம் 05.05.25 அன்று 120 கிலோ மீற்றர் தூரம்வரை சென்று தாக்கும் ஏவுகணை சோத னையை நடத்தியுள்ளது.

இந்த ஏவுகணைச் சோதனை பாகிஸ்தான் துருப் புக்களின் செயற்பாட்டு தயார் நிலையை உறுதி செய்வ தையும், ஏவுகணையின் மேம்பட்ட வழிசெலுத்தல் அமைப்பு மற்றும் மேம்பட்ட துல்லியம் உள்ளிட்ட முக்கிய தொழில்நுட்ப அளவுருக்களை சரிபார்ப்பதையும் நோக்கமாகக் கொண்டது.

அதேவேளை 03.0525 இல் 450 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கும் மேற்பரப்பில் இருந்து மேற்பரப்புக்கு ஏவுகணை சோதனையை நடத்தியதாக இராணுவம் அறிவித்தது. எனினும், இந்த இரண்டு

தொடர்ச்சி▼

இந்திய - பாகிஸ்தான் இடையே அணு ஆயுத போர் மூளுமா?

தொடர்ச்சி▲

சோதனைகளும் எங்கு நடத்தப்பட்டன என்று பாகிஸ்தான் இராணுவம் தெரிவிக்கவில்லை.

காஷ்மீரின் தொடர் பிணக்கு

வரலாற்று ரீதியில் இந்தியா சுதந்திரம் அடைந்ததும் இந்திய நிலப்பரப்பில் அடங்கி இருந்த சமஸ்தனங்கள் இந்தியாவோடும், பாகிஸ்தான் நிலப்பரப்பில் அமைந்த சமஸ்தானங்கள் பாகிஸ்தானோடும் இணைந்தன.

புவியியல் ரீதியாக இரண்டில் இருந்தும் ஒதுங்கி இருந்த காஷ்மீர் தனி நாடாகவே இருந்தது. மக்கள் தொகையில் பெரும்பாலானோர் முஸ்லீம்களாகவும் மன்னர் இந்துவாகவும் இருந்தும் கூட எந்தப் பிணக்கும் அங்கு பாரிய அளவில் அக்காலத்தில் ஏற்படவில்லை.

பாகிஸ்தான் பேராசைப்பட்டது போல் காஷ்மீர் மக்கள் முஸ்லீம்கள் என்பதால் தாங்கள் படையெடுத்துச் சென்றால் நம்மை ஆதரிப்பார்கள் என்று தப்புக் கணக்குப் போட்டு பாகிஸ்தான் உள்ளே நுழைய நாட்டைக் காக்க மன்னர் ராம்சிங் இந்திய ராணுவத்தின் உதவியை நாடினார்.

1947 பிரிவினையின் போது பாகிஸ்தான் ஆக்கிரமித்த பகுதியைப் பாகிஸ்தான் எடுத்துக் கொள்ள, இந்தியப் படைகள் நுழைந்த பிறகு மிஞ்சிய பகுதிகளை இந்தியா இணைத்துக் கொண்டது. அன்று பிடித்தது அந்த நிலப்பரப்புக்கும் காஷ்மீர் மக்களுக்குமான தீராத வலி.

1940களின் இறுதியில் காஷ்மீரை இந்தியாவோடு இணைத்த போது நேரு அப்போது சில உரிமைகளை அரசியல் சாசனப் பிரிவிலேயே எழுதிக் குடுத்தார். ஆனால் அவைகள் நீக்கப்பட்டு இருக்கின்றன.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு

1947 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பாகிஸ்தான் பழங்குடி மக்களைக் கொண்ட படை காஷ்மீருக்குள் நுழைந்தது. தற்போதைய பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியை வளைத்தது. பாகிஸ்தான் ராணுவம் பின்புலத்தில் இருந்து செயற்பட்டது.

வேறு வழியில்லாத சூழலில் மன்னர் ஹரி சிங், இந்தியாவிடம் ராணுவ உதவி கோரினார். காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்க அவர் சம்மதித்தார். அப்போது பிரதமர் ஜவஹர்லால் நேரு மற்றும் மன்னர் ஹரி சிங் இடையே ஒப்பந்தம் கையெழுத்தானது.

காஷ்மீர் இந்தியாவுடன் இணைய ஒப்புக்கொண்டது. அதன் பாதுகாப்புக்கு இந்தியா முழு பொறுப்பேற்றது. இருப்பினும் பாகிஸ்தான் காஷ்மீரின் குறிப்பிட்ட பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டதால் நேரு, ஐ.நாவிடம் முறையிட்டார். இதனைத் தொடர்ந்து ஐ.நா. சபையின் தீர்மானத்தின்படி பாகிஸ்தான் படைகளும் தங்கள் பகுதிக்குள் இருக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. தற் போதைய நிலையில் கட்டுப்பாட்டுக் கோடு உரு வாக்கப்பட்டது. இன்றுவரை அதுவே காஷ்மீரின் பாகிஸ்தானுடனான தார்மீக எல்லையாக இருந்து வருகிறது.

1962 இந்தியா - பாக். போர்

இந்தக் காரணத்தை முன்வைத்தே இரு நாடுகள் இடையே போர்களும் நடந்துள்ளன. 1962 ஆம் ஆண்டு முதல் இந்தியா – பாக். போர் மூன்று தடவைகள் நடந் துள்ளன.

1989 ஆம் ஆண்டுக்குப் பிறகு காஷ்மீரில் தீவிரவாதம் புதிய வடிவத்தை எடுத்தது. காஷ்மீர் தீவிரவாதமும், அதனைத் தூண்டிவிடும் பாகிஸ்தானும் இன்றளவும் இந்தியாவுக்குப் பெரிய தலைவலியாக இருந்து வருவதாக இந்திய அரசு குற்றஞ்சாட்டி வருகிறது.

ஆனால், அரசியல் ரீதியாக காஷ்மீர் பல துண்டுகளாகி விட்டன. தேசிய மாநாட்டுக் கட்சி மட்டுமின்றி மக்கள் ஜனநாயக கட்சியும் காஷ்மீர் பள்ளத்தாக்கு மக்களின் கட்சியாக விளங்குகிறது. பா.ஜ.கவும், காங்கிரஸும் ஜம்மு பகுதியைப் பிரதிநிதித்துவப்படுத்த மத முரண் பாட்டை பயன்படுத்துவதுடன், அரசியல் மட்டுமின்றி பிரிவினைவாதம், தீவிரவாதம் என பல வடிவங்களைக் கொண்ட சிக்கல் நிறைந்த பிரச்சினையாக காஷ்மீர் உருவெடுத்துள்ளது.

பாகிஸ்தான் பதிலடி சாத்தியமா?

இந்தியாவின் தாக்குதலானது தற்காலிக மகிழ்ச்சி என்றும், ஆனால் நீடித்த துக்கத்தால் மாற்றப்படும் என்று பாகிஸ்தான் கடுமையான எச்சரிக்கை விடுத்துள் ளது. பாகிஸ்தானின் ஆயுதப் படைகளின் செய்தித் தொடர்பாளர், இந்தியாவின் தாக்குதலுக்கு பாகிஸ்தான் இராணுவம் தனது விருப்பமான நேரத்தில் மற்றும் விரும்பிய இடத்தில் பதிலடி கொடுக்கும் என்று கூறி யுள்ளார்.

மேலும் பாகிஸ்தான், இந்தியாவுக்கு பதிலடி கொடுக் காமல் விடாது என்று பாகிஸ்தான் செய்தித் தொடர்பாளர் கூறியுள்ளார்.

ஒபரேஷன் சிந்தூர் தொடர்பாக இன்று அனைத்து கட்சி கூட்டம்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் 'ஒபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்நிலையில், "டில்லியில் உள்ள நாடாளுமன்ற நூலக கட்டடத்தில் இன்று அனைத்து கட்சி கூட்டம் நடைபெறும்" என இந்திய நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங், உள் துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் நாடாளுமன்ற விவகாரத் துறை அமைச்சர் கிரண் ரிஜிஜு ஆகியோர் இக்கூட்டத்துக்கு தலைமை தாங்குவார்கள் என அறிவிக்கப் பட்டுள்ளது.

இக்கூட்டத்தில், ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் நடந்த தாக்குதல் குறித்து விரிவாக தெரிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மேலும் தேசிய பாதுகாப்பு தொடர்பாக அடுத்த படியாக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விவாதிக்கப்படும் என கூறப்படுகிறது.

பஹல்காம் தீவிரவாத தாக்குதல் நடந்த சில தினங்களில் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற்றது. இதில், தாக்குதலில் தொடர்புடைய தீவிரவாதிகள் மீது அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு முழு ஆதரவு அளிக்கப்படும் என எதிர்க்கட்சிகள் தெரிவித்திருந்தன. இந்நிலையில் இன்று மீண்டும் அனைத்து கட்சி கூட்டம் நடைபெற உள்ளது.

பாகிஸ்தான் தாக்கினால் பதிலடிக்கு தயார்: உலக நாடுகளிடம் அஜித் தோவல் விளக்கம்

"பாகிஸ்தானுடன் பதற்றத்தை அதிகரிக்கும் நோக்கம் இல்லை. பாகிஸ்தான் தாக்குதலில் இறங்கினால் மீண்டும் பதிலடி கொடுக்க இந்தியா தயாராக உள்ளது."

- இவ்வாறு உலக நாடுகளிடம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் நேற்று விளக்கம் அளித்தார்.

பாகிஸ்தானில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது தாக்குதல் நடத்தப் பட்ட பின் அமெரிக்க பாதுகாப்பு ஆலோசகர் மார்கோ ரூபியோ, இங்கிலாந்து பாதுகாப்பு ஆலோசகர் ஜொனாதன் பவல், சவூதி அரேபியா பாதுகாப்பு ஆலோசகர் முசைத் அல் அய்பன்,

ஜப்பான் பாதுகாப்பு ஆலோசகர் மசாடாகா ஒகானா ஆகியோரிடம் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் தோவல் நேற்று போனில் பேசினார்.

பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீர், பாகிஸ்தான் ஆகிய பகுதிகளில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது மட்டும் தாக்குல் நடத்தியது குறித்து விளக்கினார். அப்போது, 'பாகிஸ்தானுடன் பதற்றத்தை அதிகரிக்கும் நோக்கம் இல்லை எனவும், ஆனால், பாகிஸ்தான் தாக்குதல் நடவடிக்கையில் இறங்கினால் மீண்டும் பதிலடி கொடுக்க இந்தியா தயாராக உள்ளது என இந்தியாவின் நிலைப்பாட்டை தெளிவுபடுத்தினார்.

இதேபோல் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர், கட்டார் பிரதமர் ஷேக் முகமதுவை தொடர்பு கொண்டு, எல்லை தாண்டிய தீவிரவாதத்தை முறியடிக்க எடுத்த நடவடிக்கைகள் குறித்து விவரித்தார்.

பிரதமரின் நடவடிக்கைக்கு துணை நிற்க வேண்டும்

பவன் கல்யாண் தெரிவிப்பு

பிரதமரின் நடவடிக்கைக்கு துணை நிற்க வேண்டும் என ஆந்திர துணை முதல்வர் பவன் கல்யாண் தெரிவித்துள்ளார்.

'ஒபரேஷன் சிந்தூர்' குறித்து பவன் கல்யாண் நேற்று ஹைதராபாத்தில் கருத்து தெரிவிக்கையில்,

"ஒபரேஷன் சிந்தூர் நம் அனைவருக்கும் பெருமை அளிக்கிறது. பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் பாகிஸ்தானுக்கும் தீவிரவாதிகளுக்கம் தகுந்த பாடம் கற்பித்துள்ளோம்.

பிரதமரின் நடவடிக்கைக்கு நாம் துணை நிற்க வேண்டும். நாட்டில் கடைசி தீவிரவாதி கொல்லப்படும் வரை பிரதமர் ஓய மாட்டார். பாகிஸ்தானுக்கு ஆதரவாக பேசி வரும் அரசியல்வாதிகள் தங்களின் மனோபாவத்தை மாற்றிக்கொள்வது அவசியம். இந்திய இராணுவத்தையோ, அரசையோ சமூக வலைதளங்களில் விமர்சித்தால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்."- என்றார்.

புதிய பரிசுத்த பாப்பரசர் தெரிவின் முதல் கட்டம் தீர்மானமின்றி நிறைவு

புதிய பரிசுத்த பாப்பரசரை தெரிவு செய்வதற்கான முதல்சுற்று வாக் கெடுப்பு தீர்மானமின்றி நிறைவடைந் துள்ளது.

கத்தோலிக்க மக்கள் உள்ளிட்ட முழு உலகமும் கவனம் செலுத்தி யுள்ள கொன்கிலேவ் எனப்படும் பரி சுத்த பாப்பரசரை தெரிவு செய்வதற் கான இரகசிய வாக்கெடுப்பு நேற்று ஆரம்பமானது.

உலகளாவிய ரீதியில் இருக்கும் 252 கத்தோலிக்க கர்தினால்களில் 135 பேர் கூடி புதிய பாப்பரசர் ஒரு வரை தெரிவு செய்யவதற்காக சிஸ் டைன் தேவாலயத்தில் நடந்த சிறப்பு பிரார்த்தனை கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆராதனையைத் தொடர்ந்து கர்தி னால்கள் இரகசிய வாக்கெடுப்பு இடம்பெறும் அறைக்குள் சென்ற னர்.

புதிய பாப்பரசர் தெரிவு செய்யப் படும் வரையில் கர்தினால்கள் வெளி உலகத்துடன் எவ்வித தொடர்புகளை யும் ஏற்படுத்த முடியாது.

நற்செய்தி கிடைக்கப்பெறும் வரை யில் ஆயிரக்கணக்கான மக்கள் வத்திக்கானில் உள்ள சென் பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடியிருந்தனர்.

வத்திக்கான் நேரப்படி நேற்றிரவு 9 மணியளவில் சிஸ்டைன் தேவால யத்தின் கூரையில் உள்ள புகைபோக் கியில் இருந்து கறுப்பு புகை வெளி யானது.

முதல் சுற்று இரகசிய வாக்கெடுப் பில் புதிய பாப்பரசர் தெரிவு செய்யப் படாமையை இது குறிக்கின்றது.

அதற்கமைய இரகசிய வாக் கெடுப்பு இன்றும் இடம்பெறவுள்ளது.

இந்திய இராணுவத் தாக்குதலால் நெருக்கடி: ஆயுத பற்றாக்குறையால் பாகிஸ்தான் தவிப்பு

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக பாகிஸ்தான் மீது இந்தியா வான்வழித் தாக்குதல் நடத்தி உள்ளது. இதன் பிறகு இந்திய இராணுவப் படைகள் மிகுந்த விழிப்புடன் உள்ளன.

இந்தியாவின் முன்னேற்பாடுகளை கண்டு, பாகிஸ்தானில் அச்சம் அதிகரித்துள்ளது. இருநாடுகள் இடையே போர் ஏற்பட்டால் நீண்ட காலம் தாக்குப் பிடிக்க முடியாத நிலையில் பாகிஸ்தான் உள்ளது. இதற்கு பாகிஸ்தானிடம் ஆயுதங்கள் மற்றும் வெடி மருந்துகளுக்கு பெரும் பற்றாக்குறை இருப்பதாகக் கூறப்படுகிறது.

பாகிஸ்தானிடம் தற்போது 96 மணி நேரம், அதாவது 4 நாள்கள் மட்டுமே பீரங்கிகள் மற்றும் ரொக்கெட்டுகளை இயக்குவதற்கான வெடி மருந்துகள் உள்ளன. இதனால் மிகவும் ஆபத்தான சூழலுக்கு அந்நாடு தள்ளப்பட்டுள்ளது,

இதுகுறித்து பாகிஸ்தான் எல்லைகளில் பணியாற்றும் இந்திய உளவுத் துறை வட்டாரம் குறிப்பிடுகையில், பாகிஸ்தானின் இராணுவ உத்தி இந்தியாவுக்கு எதிராக அதன் நிலங்களை கைப்பற்றுவதை அடிப்படையாகக் கொண்டது. இதற்கு பாகிஸ்தானுக்கு 155 மில்லி மீற்றர் குண்டுகள் மற்றும் 122 மில்லி மீற்றர் ரொக்கெட்டுகள் தேவை. அவை இப்போது அதன் கையிருப்பில் இல்லை. இராணுவத்துக்கான வெடிமருந்துகளை தயாரிக்கும் பாகிஸ்தான் ஆர்டினன்ஸ் தொழிற்சாலையானது காலாவதியான தொழில்நுட்பம் மற்றும் அதிகரித்து வரும் உலகளாவிய தேவை காரணமாக புதிய பொருள்களை வாங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டு வெகு காலமாகி விட்டது.

பாகிஸ்தான் சமீபத்தில் உக்ரைனுக்கு அதிக அளவிலான வெடிமருந்துகளை விற்றுள்ளது, இதனால் அதன் சொந்த இராணுவ இருப்புகள் கிட்டத்தட்ட நிறைவடைந்து விட்டன. இதனால் இராணுவம் பலவீனம் அடைந்துள்ளது. பாகிஸ்தானின் பொருளாதார நிலையும் வெடிமருந்துகளை உருவாக்கும் அளவுக்கு இல்லை. அங்கு பணவீக்கம் உச்சத்தில் உள்ளது. கடன் அதிகரித்து வருகிறது. அந்நியச் செலாவணி இருப்பும் வேகமாக குறைந்து வருகிறது என்று தெரிவித்தது.

வெடிமருந்து பற்றாக்குறையில் சிக்கியுள்ள பாகிஸ்தானிடம் இந்தியாவுக்கு இணையான ஆயுதங்களும் இல்லை. இருப்பினும், பாகிஸ்தான் தலைவர்கள் இந்தியாவுக்கு எதிராக அச்சுறுத்தல் வெளியிடுவதை நிறுத்தவில்லை.பாகிஸ்தான் அமைச்சர்களான ஹனிஃப் அப்பாஸி, அதாவுல்லா தரார், காஜா ஆசிப் ஆகியோரும் தாக்குதல் மிரட்டல் விடுத்திருப்பது அந்நாட்டில் பதற்றம் அதிகரிப்பதற்கு முக்கிய காரணமாக அமைந்தது. சர்வதேச நாடுகளிடம் ஒவ்வொரு பைசாவுக்கும் பாகிஸ்தான் கெஞ்சியபடி இருப்பதாக கூறப்படுகிறது. பாகிஸ்தான் மக்கள் கோதுமை மா மற்றும் தண்ணீருக்காக உள்நாட்டில் போராடி வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வீடுகளை விட்டு வெளியேறி மலையில் தஞ்சமடைந்த மக்கள்

பாகிஸ்தானில் அவலம்

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தானில் உள்ள 4 இடங்கள் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள 5 இடங்களில் உள்ள தீவிரவாத முகாம்கள் மீது இந்திய பாதுகாப்புப் படை நேற்று அதிகாலையில் தாக்குதல் நடத்தியது. அப்போது வீடுகளை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடங்களில் தஞ்சம் அடையுமாறு முஸாபராபாத் பகுதியில் உள்ள மசூதி ஒலிபெருக்கிகள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டதாக உள்ளூர்வாசிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து ஒருவர் கூறும்போது, “வெடி சத்தம் கேட்டு வீட்டை விட்டு வெளியே வந்தோம். அப்போது மீண்டும் குண்டு வெடித்தது. இதனால் அச்சமடைந்த நாங்கள், குழந்தைகளுடன் வீட்டைவிட்டு வெளியேறி மலைப்பகுதிக்குச் சென்றோம்.” என்றார்.

பஹல்காமில் நமது அப்பாவி சகோதரர்களை கொன்றதற்கான பாரதத்தின் பதிலடிதான் ஒபரேஷன் சிந்தூர் என்று அமைச்சர் அமித் ஷா கூறியுள்ளார்.

இதுகுறித்து மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, ‘எக்ஸ்’ தளத்தில் நேற்று வெளியிட்ட பதிவில்,

“நமது ஆயுதப் படைகள் குறித்து பெருமை கொள்கிறேன். பஹல்காமில் நமது அப்பாவி சகோதரர்களை கொடூரமாக கொன்றதற்கான பாரதத்தின் பதிலடிதான் ஒபரேஷன் சிந்தூர். இந்தியா மற்றும் அதன் மக்கள் மீது நடத்தப்படும் எந்தவொரு தாக்குதலுக்கும் தக்க பதிலடி கொடுக்க மோடி அரசு உறுதிபூண்டுள்ளது. தீவிரவாதத்தை வேருடன் ஒழிப்பதில் பாரதம் உறுதியாக உள்ளது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

கனடா முரசு

வியாழக்கிழமை 08/05/2025

கொள்ளை சம்பவத்துடன் தொடர்புடைய நபர் கைது

டொரண்டோ நகரில் உள்ள ஸ்கார்பரோ பகுதியில் உள்ள ஒரு கடையை துப்பாக்கியுடன் கொள்ளையிட முயன்றதாக ஒருவர் கைது செய்யப்பட்டு, பல்வேறு குற்றச்சாட்டு 02

கனடிய பிரதமரை ஆளுனர் கார்னி என அழைப்பதற்கு வாய்ப்பில்லை; டிரம்ப்

கனடா பிரதமர் மார்க் கார்னியை ஆளுனர் கார்னி எனக் குறிப்பிட வாய்ப்பில்லை என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப், தெரிவித்துள்ளார்.

'கவர்னர் கார்னி' என அழைத்தது இல்லையா? என ஊடகங்கள் கேள்வி எழுப்பியிருந்தன.

இதற்குப் பதிலளித்த டிரம்ப, இன்னும் அழைக்கவில்லை. ஒருவேளை அழைக்க வேண்டிய அவசியமிருக்காது எனவும். ஆனால் ஜஸ்டின் டிருடோவுடன் தமக்கு பல நகைச்சுவையான தருணங்கள் காணப்பட்டன என தெரிவித்துள்ளார்.

இப்போது கார்னி பிரதமராகியிருப்பது, கனடாவுக்கே ஒரு பெரிய முன்னேற்றம் என நினைக்கிறேன் என தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண போட்டி ஏற்பாடுகள் தொடர்பான ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் நமது இருநாட்டு உறவுகள் மிகவும் வலுவாக இருக்கும் என நம்புகிறேன் என ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

கனடாவில் நடைபெற்ற கராத்தே சுற்றுப்போட்டி

கனடாவின் மொன்றியல் வோதரை டொரியன் உள்ளக அரங்கில் திறந்த சர்வதேச கராத்தே சுற்றுப்போட்டி அண்மையில் நடைபெற்றது.

இதில் கோல்டன் கராத்தே தோ மார்ஷல் ஆர்ட்ஸ் ஓர்கனைசன் மாணவர்கள் 2 தங்கம், 2 வெள்ளி மற்றும் 10 வெண்கலப்பதக்கங்களை சுவீகரித்தனர்.

இவர்களுக்கான பயிற்சிகளை சென்செய்.எஸ்.மனோகரன் வழங்கியிருந்தார்.

இந்தபோட்டியில் கனடா, அமெரிக்கா, மெக்சிகோ, நேபாளம், கொலம்பியா மற்றும் மொரிஷியஸ் ஆகிய நாடுகளிலிருந்தும் போட்டியாளர்கள் கலந்துகொண்டனர்.

03

டொரண்டோவுக்கு வந்த விமானத்தில் தட்டம்மை நோயாளி அடையாளம்

இந்த வாரம் டொரண்டோவுக்கு வந்த ஏர் கனடா விமானத்தில் ஒரு தட்டம்மை நோயாளி கண்டறியப்பட்டதைக் கருத்தில் கொண்டு, பீல் பொது சுகாதாரத்துறை (PPH) விசாரணை நடத்தி வருகிறது.

இதன் மூலம், இந்த ஆண்டில் அந்த பகுதியில் உறுதிப்படுத்தப்பட்ட தட்டம்மை நோயாளிகளின் எண்ணிக்கை ஆறாக அதிகரித்துள்ளது.

கடந்த 3 ஆம் திகதி சீடலிலிருந்து டொரண்டோவுக்கு வந்த ஏர் கனடா விமானம் AC 540 இல் பயணித்தவர்கள், அல்லது அதே நாளில் இரவு 7:30 மணிக்குத் தொடங்கி 10 மணிவரை டொரண்டோ பியர்சன் விமான நிலையத்தின் டெர்மினல் 1 பகுதியில் இருந்தவர்கள் தொற்றுக்கு உள்ளானவருடன் தொடர்புபட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

தாங்கள் நோயாளியுடன் நேரடியாக தொடர்பிலிருந்திருக்கலாம் என சந்தேகமுள்ளவர்கள், தங்களுடைய தடுப்பூசி பதிவுகளை சரிபார்த்து, தட்டம்மை நோய்த் தடுப்புக்குத் தேவையான தடுப்பூசி பெற்றுள்ளதா என்பதை உறுதி செய்ய வேண்டும் என பியர்சன் பொதுச் சுகாதார சேவை வலியுறுத்துகிறது.

அறிகுறிகள் உள்ளவர்களுக்கு உடனடி மருத்துவ ஆலோசனை



தேவை என அறிவிக்கப்பட்டுள்ளது. உயர் காய்ச்சல், இருமல், கண்ணீர் வடிதல், போன்ற தட்டம்மை அறிகுறிகள் இருந்தால், உடனடியாக மருத்துவரை அணுகுமாறு அறிவுறுத்தியுள்ளது.

ஏற்கனவே தட்டம்மை நோயினால் பாதிக்கப்படாதவர்கள் மிகவும் எளிதில் இதில் சிக்கக்கூடும்," என பீல் பிராந்திய பொதுச் சுகாதார அலுவலகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கொள்ளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4:40 மணியளவில், ஷெப்பர்ட் அவென்யூ ஈஸ்ட் மற்றும் மார்கம் வீதிக்கு அருகே இடம்பெற்றுள்ளது.

கைது செய்யும் நேரத்தில் சந்தேகநபரிடமிருந்து துப்பாக்கி, கத்தி, போதைப்பொருள் மற்றும் குண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர் டொரண்டோவைச் சேர்ந்த 35 வயதான டேனியல் பெர்டாப்சிங் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.